செய்தி வெளியீடு எண்:846 நாள்:07.10.2021

# செய்தி வெளியீடு

## <u>தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பாக தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் – 2021 (NATIONAL CYBER SECURITY AWARENESS MONTH – 2021) துவக்கம் மற்றும் இணைய விழிப்புணர்வு தினம் (CYBER JAAGROOKTA DIWAS) அனுசரித்தல்</u>

அக்டோபர் மாதம் உலகளாவிய அளவில் தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதமாக (NCSAM) கடைபிடிக்கப்படுகிறது, இதன் நோக்கம் பொது மற்றும் தனியார் துறையினரிடையே இணைய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின்படி, ஒவ்வொரு மாதமும் முதலாவது புதன் கிழமை இணைய விழிப்புணர்வு தினமாக (CYBER JAAGROOKTA DIWAS) கடைப்பிடிப்பதற்கான மாநிலத்தின் வருடாந்திர செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த செயல் திட்டத்தின்படி, தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம், கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் கடைப்பிடிக்கப்படவுள்ளது. தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் 2021–க்கான (NCSAM 2021) பொருண்மை **"DO YOUR PART. #BECYBERSMART"** என்பதாகும்.

கோவிட் பெருந்தொற்று காரணமாக டிஜிட்டல் சேவைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், இணைய அச்சுறுத்தல்களும் அதிக அளவில் பெருகி வருகிறது. இணையவழிக் குற்றங்கள் மற்றும் இணையவழி அச்சுறுத்தல்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள இணையவழி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது ஒன்றே இத்தருணத்தில் முக்கிய தேவையாகும்.

இதற்கென எல்காட் நிறுவனம் சி–டாக் நிறுவனத்துடன் இணைந்து தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம் 2021–இன் கீழ், முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர் (CISO) / தகவல் பாதுகாப்பு அலுவலர் (ISO) மாநாடுகள், கருத்தரங்குகள், மற்றும் வினாடி வினா போட்டிகள் நடத்திடவும், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பேட்ஜ்கள், சைபர் பாதுகாப்பின் சமூக ஊடக ஊக்குவிப்பு குறித்த விளக்கப்படங்கள் விநியோகிப்பது போன்ற பல்வேறு செயல்பாடுகளை நடத்தவும் ஏற்பாடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக "இணைய விழிப்புணர்வு தினம் (CYBER JAAGROOKTA DIWAS)" இன்று (07.10.2021) தமிழ்நாடு காவல் துறை இயக்குநர், முனைவர். C. சைலேந்திர பாபு, இ.கா.ப. அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முனைவர். நீரஜ் மித்தல், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் துறை, திரு. அமரேஷ் புஜாரி, இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் (தொழில்நுட்பம்), திரு. ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் (சைபர் க்ரைம்), திரு. அஜய் யாதவ், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம், திரு. விஜயேந்திர பாண்டியன். இ.ஆ.ப., மின்னாளுமை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மின்னாளுமை முகமை, திரு. சீனிவாச ராகவன், தேசிய தகவல் அலுவலர், தேசிய தகவலியல் மையம்–தமிழ்நாடு, முனைவர். திரு.LR. பிரகாஷ், இயக்குநர், C–DAC, சென்னை, திரு. N. சரத் சந்திர பாபு, செயல் இயக்குநர், SETS, முனைவர். திரு.R.முத்து குமார், இயக்குநர், STQC ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9